




"இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்"



அன்புக்குரிய உறவுகளே, டென்மார்க் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் செய்திக் கையேடான *'அருளோசை' முதல் தடவையாக உங்கள் கரங்களில் தவழ்கிறது. டென்மார்க்கில்* வாழுகின்ற அனைத்துத் தமிழ் மக்களும் எமது ஆன்மிகப் பணியகத்தின் செயற்பாடுகளை நன்கு அறிந்து, இந்தச் செயற்பாடுகளுக்கு தங்கள் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு இந்தக் கையேடு இப்போது வெளியிட்டு வைக்கப்படுகிறது.

"அஞ்சாதீர்கள்! இதோ எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூாக்கா 2:10 -11).

அன்னை மரியின் உதரத்திலிருந்து ஆண்டவர் இயேசு பெத்லகேமிலே பிறந்த போது, அவர் பிறந்த செய்தி இவ்வாறு தான் தமது மந்தையைக் காவல் காத்துக்கொண்டிருந்த இடையர்களுக்கு வானதூதர்களால் அறிவிக்கப்பட்டது.

‘கன்னியீன்ற செல்வமே இம்மண்ணில் வந்த தெய்வமே’ என்று ஒரு கிறிஸ்து பிறப்புப் பாடல் இயேசுவின் பிறப்பை அழகாகப் பாடுகிறது. உண்மையில் இறைமகன் இயேசு மனிதரில் ஒருவனாக, குழந்தையாக இம்மண்ணில் பிறந்தது என்பது மனித குலத்தைப் பொறுத்தவரையில் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தி தான்.

இந்த உலக வரலாற்றில் எண்ணிட முடியாத எண்ணிக்கையான குழந்தைகள் இம் மண்ணிலே பிறந்திருக்கின்றன. ஆனால் அத்தனை பிறப்புகளிலும், இயேசுவின் பிறப்பு ஒன்று தான் உலக வரலாற்றை முழுமையாக மாற்றி அமைத்திருக்கிறது. ‘கிறிஸ்துவுக்கு முன்’, ‘கிறிஸ்துவுக்குப் பின்’ என்று உலக வரலாறு இரண்டாகப் பிரிக்கப்படும் அளவுக்கு குழந்தை இயேசுவின் பிறப்பு முக்கியமானது.

குழந்தை இயேசுவின் பிறப்பு இவ்வாறாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்ததற்கான அடிப்படைக்காரணம் என்ன?

கிறிஸ்து இந்த மண்ணிலே பிறப்பதற்கு முன்னர் இறைவனுக்கும் மனித குலத்துக்குமான உறவு, ஒரு 'தொலைதூர உறவாகவே' இருந்து வந்தது.

''பலமுறை பல வகைகளில், முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாட்களில், தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்'' என்று எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் சுட்டிக்காட்டுகிறது (எபிரேயர் 1:1-2).

பல நூற்றாண்டுகளாக இஸ்ராயேல் மக்களை வழிநடத்தி வந்த இறைவன், இறைவாக்கினர்கள் மூலமாகவே தமது செய்தியை அந்த மக்களுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தார். ஆனால் இயேசுவின் பிறப்புடன், அந்த அணுகுமுறை முற்றாக மாற்றம் பெற்றது.

மானிட குலத்தை வழிநடத்தப் பழைய ஏற்பாட்டில் பல்வேறு வழிவகைகளைக் கையாண்ட இறைவன், ஈற்றில் இந்த உலகையும், உலகில் வாழும் மாந்தரையும் மீட்கும் பொருட்டு தமது ஒரே மகனையே அனுப்பத் திருவுளம் கொண்டார்.

இதன் காரணமாகவே தூய ஆவியின் துணையோடு அன்னை மரியின் உதரத்தில் கருவான இறைமகன், ஈற்றில் பெத்லகேமிலே மாட்டுத்தொழுவத்திலே மிகவும் ஏழ்மையாகப் பிறந்தார்.

இறைமகன் கிறிஸ்து இந்த உலகத்தில் குழந்தையாகப் பிறந்த போது, அந்த இறைமகன் வழியாக இறைவன் உலக வரலாற்றில் தமது பிரசன்னத்தை நிலைநிறுத்தினார். இந்த இறை குழந்தை ‘இம்மானுவேல்’ என அழைக்கப்பட்டது. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்று பொருள். அதாவது அன்று வரை மனித வரலாற்றைத் தொலைவிலே நின்று வழிநடத்திய இறைவன், இன்று தானும் மனிதரில் ஒருவனாகப் பிறப்பெடுத்தார். ஆண்டவர் இயேசு குழந்தையாக இம்மண்ணில் பிறந்த போது, இறைவனது அரசும் அவரது ஆட்சியும் இந்த உலகில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இறைமகன் இயேசு பாலகனாய் இந்த மண்ணில் அவதரித்த போது, பாவ இருளில் மூழ்கிக் கிடந்த மானிட குலத்துக்கு மீட்பு என்ற ஒளி விண்மீனாகத் தோன்றிப் பிரகாசித்தது. பின்னர் இயேசு சிலுவையில் தனது இன்னுயிரை ஈந்த போது, அந்த மீட்பு முழுமை பெற்றது.

அன்று பெத்லகேமில் மாட்டுத்தொழுவத்தில் பிறந்த இயேசு, இன்று எங்கள் இதயத் தொழுவங்களில் பிறக்க வேண்டும். ஆண்டவர் இயேசுவின் பிறப்பைக் கொண்டாட நாங்கள் ஆயத்தம் செய்துவரும் இக்காலப்பகுதியில்

எங்கள் உள்ளங்களில் அவர் பிறக்கும் பொருட்டு, எங்கள் இல்லக் கதவுகளை மட்டுமல்ல, எங்கள் இதயக் கதவுகளையும் நாங்கள் அகலத் திறந்து வைக்க வேண்டும். எங்கள் இல்லங்களை வண்ண வண்ண மின்குமிழ்களால் அலங்கரிப்பதுடன் நிறுத்திவிடாது, எங்கள் இதயங்களை அன்பு என்ற அணிகலனால் அலங்கரிப்போம். எமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் பரிசுப்பொருட்களை அள்ளிவழங்குவதோடு நிறுத்திவிடாது நாமே எம்மை பரிசுப்பொருளாக அடுத்தவருக்குக் கொடுப்போம்.

‘உறவோடு வாழும் உள்ளங்களில் நடுவில் தெய்வம் தரிசனம்’ என்று ஒரு பஜனைப்பாடல் உறவின் மேன்மையை உரத்துச் சொல்கிறது.

மொத்தத்தில் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா எமது உள்ளங்களுக்கும் இல்லங்களுக்கும் அமைதியையும் புத்துணர்வையும் தந்து, ஒருவர் ஒருவரோடு எமக்குள்ள உறவுகளை நாம் மீண்டும் புதுப்பித்து அன்பு நிறைந்த வாழ்வாக எமது வாழ்வை மாற்ற எமக்குத் துணைசெய்யட்டும்.

உங்கள் எல்லோருக்கும் எங்கள் ஆன்மிகப் பணியகம் சார்பாக எமது உளங்கனிந்த கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்துகொள்வதில் நிறைவடைகிறோம்.

ச.எட்மன்ட் றெஜினோல்ட் அ.ம.தி
ஆன்மிக குரு

டென்மார்க் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் 2வது ஒன்றுகூடல் வைலை புனித நோபேட் ஆலய மண்டபத்தில், 22.10.2022 அன்று பணியக வழிகாட்டி அருட்தந்தை றெஜினோல்ட் சவிரிப்பிள்ளை அ.ம.தி. அவர்களின் தலைமையில் செயலாளர் மற்றும் பங்கு இணைப்பாளர்களின் பங்குபற்றுதலுடன் பணியக வழிகாட்டியின் கொள்கைப் பிரகடனத்துடன் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஆன்மிகப் பணியகத்தால் மக்களின் நலன் கருதி எடுக்கப்படவிருக்கும் பணிகள் தொடர்பாக ஆராயப்பட்டு, அனைத்து பங்கு இணைப்பாளர்களும் அவற்றை அமுல்படுத்துவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் சுவன்போ பங்கிற்கான கௌரவ உறுப்பினராக திரு.றொபின்சன் பயஸ் குருசுமுத்து பணியக வழிகாட்டியினால் தெரிவுசெய்யப்பட்டார்.

டென்மார்க் பணியகம் முதல் தடவையாக இளையோர் அமைப்பை உருவாக்கி, எதிர்காலத்தில் அவர்களுக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதெனப் பணியக வழிகாட்டியினால் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அனைத்து பங்கு இணைப்பாளர்களும் அவர்கள் தத்தமது பங்கு இளையோரை ஒன்று திரட்டி, இந்த இளையோர் அமைப்பை அமைப்பதெனவும் இதற்குப் பொறுப்பாக திருமதி நிசாந்தி, திரு.அன்ரனி பீற்றர், திரு.செல்ரன் செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் பொறுப்பாக இருப்பார்கள் என முடிவுசெய்யப்பட்டது. இளையோருக்கான முதலாவது ஒன்றுகூடலை அடுத்த வருடத்தின் முற்பகுதியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆன்மிகப் பணியகத்தின் செயற்பாடுகளைச் சுலபமாக்கும் நோக்குடன் ஒவ்வொரு பங்கில் இருந்தும் பிரதி பங்கு இணைப்பாளரைத் தெரிவுசெய்வதென்றும் இத்தெரிவை அப்பங்கு இணைப்பாளரே மேற்கொள்ள வேண்டுமென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பங்கு இணைப்பாளர் சுகவீனம் அடைந்தாலோ, அல்லது நாட்டில் இல்லாத பட்சத்திலோ, பிரதி பங்கு இணைப்பாளர்கள் கடமையாற்றுவார்கள். நத்தார், புதுவருடத் திருப்பலிகளுக்கான நேர அட்டவணை பணியக வழிகாட்டியினால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பணியக இணையத்தளமான www.tamilsk-katolsk.dk இல் பணியகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் அறிந்துகொள்ளலாம்.

உரோமாபுரியில் அறநெறி இறையியலில் தனது முனைவர் பட்டப்படிப்பை மேற்கொண்டுவரும் அருட்தந்தை றொக்சன் அவர்கள் மார்கழி மாதம் டென்மார்க் வர இருப்பதால் அவருக்கான வதிவிட ஒழுங்குகளை பணியகம் மேற்கொள்ளும் எனவும் அவரது அன்றாட தேவைகளுக்கான ஒழுங்குகளை திரு.அன்ரனி பீற்றர் மேற்கொள்ளுவார் எனவும் முடிவுசெய்யப்பட்டது. ஆன்மிகப் பணியகத்தின் அடுத்த வருடத்துக்கான முதலாவது ஒன்றுகூடல் 20.05.2023 அன்று ஸ்ருவர் ஆலயத்தில் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு.சண்
செயலாளர்



**2023ம் ஆண்டுக்கான நிகழ்வுகள்**

04.02.2023 புனித செபஸ்தியார் திருநாள் -

Vejle 14.00

01.04.2023 திருச்சிலுவை வழிபாட்டுத் திருப்பலி -

Aalborg 14.00

22.04.2023 லூர்து அன்னை திருவிழா -

Aalborg 14.00

13.05.2023 பாத்திமா அன்னை திருவிழா -

Randers 14.00

17.06.2023 புனித அந்தோனியார் திருவிழா -

Svendborg 14.00

26.08.2023 மருதமடு அன்னை திருப்பயணம் -

Ømborgen 11.00

09.09.2023 வேளாங்கண்ணி அன்னை திருவிழா -

Struer 14.00

## கிறிஸ்து பிறப்பு, புத்தாண்டு தமிழ் திருப்பலிகள் 2022-23

**டிசம்பர் 24, 2022 – சனிக்கிழமை**

| | |
|---|---|
| ஸ்ரூவர் | 23.30 |

**டிசம்பர் 25, 2022 – ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| ஸ்ரூவர் | 10.30 |
| ஹோர்லேவ் | 14.30 |
| வைலை | 16.00 |
| பிறெடெறிக்ஸ்ஹாவன் | 17.00 |
| ஹோல்பெக் | 18.00 |

**டிசம்பர் 26, 2022 – திங்கட்கிழமை**

| | |
|---|---|
| ஹோசன்ஸ் | 12.00 |
| ஸ்வென்போர் | 12.00 |
| ஓபன்றோ | 17.30 |

**டிசம்பர் 30, 2022 – வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| கோலிங் | 15.00 |

**டிசம்பர் 31, 2022 – சனிக்கிழமை**

| | |
|---|---|
| ஸ்ரூவர் | 18.00 |

**ஜனவரி 1, 2023 – ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| ஹோர்ணிங் | 11.00 |
| றாணர்ஸ் | 15.30 |
| ஒல்போ | 17.00 |